©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 33]

சென்னை, புதன்கிழமை, ஆகஸ்ட் 26, 2009
ஆவணி 10, திருவள்ளுவர் ஆண்டு–2040

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 29ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 9/2009**

***1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2009–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல்தேதியில் இருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 13/1974.

3–B எனும் பிரிவைப் புகுத்துதல்.

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் 3–A எனும் பிரிவிற்கு பின்னர், பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது :—

**3–B சாலைப் பாதுகாப்பு வரி விதிப்பு :—**

(1) பல்வேறு சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, இயக்கூர்திகளைப் பதிவு செய்யும் நேரத்தில், ஆறாம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் “சாலைபாதுகாப்பு வரி” என அழைக்கப்படுகிற கூடுதல் வரி ஒன்றை விதித்து வசூலித்தல் வேண்டும்.

(2) (1)–ஆம் உட்பிரிவின்படி விதிக்கப்பட்ட வரியானது, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) (2)–ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு, வரியை திருப்பிச் செலுத்துதல் தொடர்பான வகைமுறைகள் நீங்கலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளும், இந்தச் சட்டத்தின்படி இயக்கூர்திகள் வரி விதிப்பு மற்றும் வசூலிப்பு தொடர்பாக பொருந்துவது போன்று, இயன்றவரையில் (1) ஆம் உட்பிரிவின்படி செலுத்தத்தக்க வரியை விதித்து வசூலிப்பது தொடர்பாகப் பொருந்துதல் வேண்டும்.''.

புதிய இணைப்புப் பட்டியல் புகுத்தப்படுதல்.

**3.** முதன்மைச் சட்டத்தின் ஐந்தாம் இணைப்புப் பட்டியலுக்குப் பின்னர், பின்வரும் இணைப்புப் பட்டியலானது சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது :—

**"ஆறாம் இணைப்புப் பட்டியல்.**

**(3–B எனும் பிரிவைக் காணவும்)**

| ***இயக்கூர்திகளின் வகை*** | ***வரி*** |
|---|---|
| ***(1)*** | ***(2)*** |
| | **ரூ.** |
| **1.** மிதி இயக்கிகள் | 250/– |
| **2.** சிறு பளு ஊர்திகள் | 1,500/– |
| **3.** பிற இயக்கூர்திகள் | 2,000/– |

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.